Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 162

திங்கட்கிழமை
06 மே 2024

சித்திரை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆ...


முச்சந்தி முரளி



"முதல்ல கப்பலை ஓட விடுங்கோ மானியத்தை பிறகு பார்க்கலாம் கண்டியளோ"

ஜனாதிபதித் தேர்தல்

# இரகசியமாகக் கருத்துக்கணிப்பு; நடத்தினாராம் சீன அமைச்சர்



இராஜதந்திர நெறிமுறைகளை மீறியதாகக் குற்றச்சாட்டு

**கொழும்பு, மே 6**

**சீனத் துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழு ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என்பதை நேரடியாகக் கண்டறியும் நோக்கில் கருத்துக்கணிப் பொன்றை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.**

11



போதைக்கு எதிரான நடவடிக்கை;

## பேச்சை விடுத்து செயலில் இறங்குக!

வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 6

போதைப்பொருள் பாவனையால் பெண்கள் அதிகளவில் சவால்களை எதிர்நோக்குகின்றனர். இந்நிலையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போதைப்பொருளுக்கு எதிரான பரப்புரைகளை விடுத்து, இளையோரை மாற்றுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் திறன்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டும் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் மது போதைக்கு எதிரான இயக்கம் நேற்று நடத்திய விழிப்புணர்வுக் கருத்தரங்கின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்படும்போது சிறந்த மாற்றங்களை எதிர்பார்க்கமுடியும். அதற்கமைய நிலையான பொருளாதாரத்தை பெற்றுக்கொள்வதற்கான புதிய திட்டங்கள் 11

## கிணற்றில் வீழ்ந்த முதியவர் உயிரிழப்பு

பருத்தித்துறை, மே 6

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் மேற்கில் கிணற்றில் தவறி விழுந்து முதியவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். அதே இடத்தைச் 11

காங்கேசன் – நாகை கப்பல்சேவை

## ஒரு வருடச் செலவை ஏற்கின்றது இந்தியா

யாழ்ப்பாணம், மே 6

இந்தியாவின் நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையேயான பயணிகள் கப்பல் சேவைக்கான ஒரு வருட காலத்துக்குரிய செலவை ஏற்க இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவின் வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் விதத்திலும் இந்தச் சேவையை மலிவு விலையிலும், பயணிகளுக்குக் கவர்ச்சிகரமானதாக மாற்றும் முகமாகவும் இந்திய அரசு இதனை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதற்கமைய வரிகள் மற்றும் இதர கட்டணங்களுக்கான செலவை (மாதாந்தம் 25 மில்லியன் ரூபாவுக்கு மேல்) ஒரு வருட காலத்துக்கு ஏற்க முடிவுசெய்துள்ளது 11

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 6

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூர்ந்து யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் கைதடியில் முன்னெடுக்கப்பட்டது. (அ-ஒ-66)

## ஓய்வுபெற்ற உயரதிகாரிகளுக்கு தீர்வையற்ற வாகன அனுமதி!

கொழும்பு, மே 6

ஓய்வுபெற்ற உயரதிகாரிகளுக்கும் நீதித்துறை உத்தியோகத்தர்களுக்கும் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

60 வயதை பூர்த்தி செய்த பின் கட்டாய ஓய்வில் 11

## யாழ். விமானத்தள அபிவிருத்தி ஒரு முதலீட்டாளரே முன்மொழிவு

கொழும்பு, மே 6

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்த நிலையில் ஒரேயொரு முன்மொழிவு மாத்திரமே கிடைக்கப்பெற்றதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலர் ருவன் சந்திர தெரிவித்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த முதலீட்டாளரே அந்த முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் ஜூலை மாதம் முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து எயார் இன்டிகோ விமான சேவை நிறுவனமும் விமானப் பயணங்களை முன்னெடுக்கவுள்ளது. (அ-ஒ-இ)

இலங்கையில் இருந்து ரஷ்யாவுக்குச் சென்ற

## கூலிப்படையின் உறவுகள் ஐ.நா.வுக்கு அவசர கடிதம்

கொழும்பு, மே 6


இலங்கையிலிருந்து ரஷ்யாவுக்கு கூலிப்படையாக அழைத்துச் செல்லப்பட்டவர்களின் குடும்பத்தினர் இலங்கையிலுள்ள ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதங்களை இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி பாரப்படுத்தியுள்ளார்.

தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாக கூலிப் படையாகச் சென்றோரின் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மஞ்சள் படைக்கு இலகு வெற்றி



பஞ்சாப்புடனான நேற்றைய ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்று, தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

தர்மசாலாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப், சென்னையை துடுப்பெடுத்தாடப் பணித்தது. சென்னை அணி ரஹானே வழமைபோன்று சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டமிழந்தார். மிட்செல் மற்றும் கெய்க்வாட் இணைந்து சிறப்பாக ஆட்டத்தை நகர்த்திய நிலையில் ராகுல் சஹார் சுழலில் சென்னை சிக்குண்டது. கெய்க்வாட் 21 பந்துகளில் 32 ஓட்டங்களுடன் வெளியேற தொடர்ந்து நுழைந்த டுபே ஓட்டமெதனையும் பெறாது முதலாவது பந்தில் ஆட்டமிழக்க சென்னை தடுமாறத் தொடங்கியது. அதன் பின்னர் மிட்செல் 19 பந்துகளில் 30 ஓட்டங்களுடனும், மொயின் அலி 20 பந்துகளில் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஜடேஜா சிறப்பாக ஆட அவருக்கு தாகூர் அதிரடியில் ஒத்துழைக்க சென்னை கௌரவமான இலக்கை நோக்கிச் சென்றது. இறுதிப் பந்துப் பரிமாற்றத்துக்காக வழமைபோன்று களமிறங்கிய டோனியை முதல் பந்திலேயே இலக்கை தகர்த்து ஆட்டமிழக்கச் செய்து அதிர்ச்சி கொடுத்தது பஞ்சாப். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்த பஞ்சாப் அணிக்கு மிச்செல் சர்னர் சுழலில் வீசி முதலாவது பந்துப் பரிமாற்றத்திலிருந்து நெருக்குதல் கொடுத்தார். மறுபுறத்தில் தேஸ்பாண்டே ஒரு பந்துப் பரிமாற்றத்தில் 2 இலக்குகளை எடுத்து பஞ்சாப்பை மீள முடியாத நெருக்கடிக்குள் ஆரம்பத்திலேயே வீழ்த்தினார். பின்னர் ஜடேஜா தனது சுழலில் இலக்குகளைச் சரிக்க அந்த அணி நூறு ஓட்டங்களையே பெறாத நிலைமை இருந்தது. ஆனால் பின்வரிசை வீரர்கள் ஓரளவு கைகொடுக்க அந்த அணி 9 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. பஞ்சாப் அணியிடம் 5 ஆட்டங்களில் தொடர் தோல்வியைச் சந்தித்த சென்னை நேற்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது. சகலதுறைகளிலும் கலக்கிய ஜடேஜா ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஒ-5)

# பிரமாண்ட வெற்றியுடன் முதலிடம் பிடித்த கொல்கத்தா

லக்னோ அணிக்கு எதிராக அவர்களது மண்ணில் இடம் பெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணி 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற லக்னோ அணி கொல்கத்தாவை துடுப்பெடுத்தாடப் பணித்தது. அந்த அணிக்கு வழமை போன்று அதிரடியில் ஆரம்பத்தை கொடுத்தால் பிலிப் சோல்ட். மறுமுனையில் நரைன் வெளுத்துவாங்கினார். 14 பந்துகளில் 32 ஓட்டங்களுடன் சோல்ட் வெளியேறினாலும் நரைன் தனித்து ஆடினார். 39 பந்துகளில் 81 ஓட்டங்களைக் குவித்த நரைன் ரவி பிசோனியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இறுதியில் ரமன்டீப் சிங் 6 பந்துகளில் 25 ஓட்டங்களைக் குவிக்க கொல்கத்தா 6 இலக்குகளை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்த லக்னோ அணிக்கு எவரும் சொல்லிக்கொள்ளும்படியாக ஆடவில்லை. ஸ்ரொய்னிஸ் மாத்திரம் 21 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் ராணா, வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (ஒ-5)



## சடலத்தின் குருதி மாதிரி கொழும்புக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், மே 6

தெல்லிப்பழை துர்க்காபுரத்திலிருந்து நேற்றுமுன்தினம் பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட நிலையில் அவரது உயிரிழப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக சடலத்தின் குருதி மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-125)

தமிழ்த் தேசிய அரசியல்

# சரியான தடத்தில் பயணிக்க கருத்துகளை கோருகிறோம்

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறிக்கை

தமிழரின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியடைகின்ற இந்தத் தருணத்தில் தமிழ்த்தேசிய தளம் எதிர்நோக்குகின்ற சவால்களாகத் தமிழ்மக்களின் இருப்புத் தொடர்ந்து இத்தீவில் தேய்ந்து வருதல், உட்கட்சிப் பூசல்களால் தமிழ்த்தேசிய மக்கள் பிரதிநிதித்துவ அரசியலின் மீது மக்களுக்கு எழுந்துள்ள விரக்தி, தமிழ்த்தேசிய இருப்பு சார், உரிமைசார் பிரச்சினைகளைத் தொடர்ந்து தூரநோக்கற்ற நிலையில் வழிவரைபடமின்றி எதிர்கொள்வதால் தீவில் கேள்விக் குறியாகி வரும் எம் மக்களின் எதிர்கால வாழ்வு என்பன தொடர்பில் ஒவ்வொரு தமிழ் மகனும் கரிசனை கொள்ளவேண்டியது அத்தியாவசியமானது. இதுதொடர்பாக உணர்வுபூர்வமான இந்த மாதத்தில் பரந்துபட்ட மக்கள் விழிப்பையையும், தமிழ்த்தேசிய அரசியலைச் சரியான செல்நெறியின் பால் வழிப்படுத்தவும் அனைத்து சிவில் சமூக குழுமங்களிடமிருந்தும் கருத்துகளை, ஆலோசனைகளை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு எதிர்பார்த்து நிற்பதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஒருங்கிணைப்புச் செயலாளர் அ.சிவஞானசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தவத்திரு. அகத்தியர் அடிகளாரைத் தலைமை ஒருங்கிணைப்பாளராக கொண்ட எமது கட்டமைப்பு பொதுவெளியில் எம் கரிசனைகளை சர்வதேசத்துக்கும், இலங்கை அரசுக்கும் வெளிப்படுத்துவதற்கு முன்னதாகத் தமிழ்த்தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளிடம் எம் கரிசனைகளையும், விடயதானங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களைக் கோரவும் எதிர்பார்த்து நிற்கின்றது.

இது தொடர்பாக உங்கள் கருத்துகள், ஆலோசனைகள், தொடுக்க வேண்டிய விடயதானங்களைப் பற்றி வெளிப்படுத்துமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஒ-66)

## மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 02 . 1961



மறைவு
04 . 05 . 2024

### வசந்தகுமாரன் சரோஜகுமாரி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தகுமாரன் சரோஜகுமாரி அவர்கள் நேற்று முன்தினம் (04.05.2024) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் பிள்ளை - இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும், இராசையா - வசந்தகுமாரன் அவர்களின் அன்பு மனைவியும், விதுஷன், நிருயலா, ஜெனா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.05.2024) திங்கட்கிழமை தாவடி சேம்காலையில் பிற்பகல் 02.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மற்றும்
சகோதரர்கள்

(CS 00426) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர் இனத்தின் கொள்கையே



## சிறீதரன் தெரிவிப்பு

**கிளிநொச்சி, மே 6**

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது என்பது தமிழ் இனத்தின் கொள்கையுடன் தொடர்புடைய விடயம் என்று தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன்.**

கிளிநொச்சி, நாச்சிக்குடாவில் நேற்றுமுன்தினம் களப்பயணம் மேற்கொண்டு முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் சிறீதரன் கேட்டறிந்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு என்பது தமிழ் மக்களின் மரபுவழித் தாயகம். தமிழ் மக்கள் இனவழிப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அதற்கொரு சர்வதேச விசாரணை இதுவரை நடந்தபாடில்லை. காணமலாக்கப்பட்டோரின் பிரச்சினைகள் அவ்வாறே தொடர்கின்றன. தற்போதும் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. எனவே எமது அபிலாஷைகளை வெளிப்படுத்த பொது வேட்பாளர் ஒருவரை நாம் களமிறக்க வேண்டியது காலத்தேவையானது - என்றார். (ம-113)

பொருளாதார நெருக்கடி எதிரொலி:

# குழந்தைகள் தத்தெடுப்பு இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, மே 6

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக குழந்தைகளைத் தத்துக்கொடுக்கும் வீதம் அதிகரித்துள்ளதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவருடத்தில் சராசரியாக சுமார் ஆயிரத்து 700 குழந்தைகள் தத்துக்கொடுக்கப்படுவதாகப் பதிவாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதிகளவான குழந்தைகள் வெளிநாட்டவர்களுக்குத் தத்துக்கொடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

# அநுரவுடன் விவாதிக்க தயாராகவே உள்ளேன்



## சஜித் அறிவிப்பு

கொழும்பு, மே 6

'தேசிய மக்கள் சக்தியின் தலைவருடனும், அந்தக் கட்சியின் பொருளாதாரக் குழுவுடனும் மே மாதத்துக்குள் விவாதம் நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது' - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

'பொருளாதாரக் குழுக்களுக்கிடையிலான விவாதத்தை நடத்த ஜே.வி.பி.யினர் தயங்குவதுபோல் தெரிகிறது. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி குழுவாக இரு விவாதங்களுக்கும் தயாராகவே உள்ளது. ஒரு விவாதம் குறித்து மட்டும் பேசாது, இரு விவாதங்களுக்கும் தேசிய மக்கள் சக்தி தயாராக வேண்டும்' - என்றார். (ம-44)

# சுதந்திரக் கட்சி பலம்பெறவேண்டும்

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, மே 6

சுதந்திரக் கட்சிக்குள் பிளவுபட்டுள்ள அணிகள் ஒன்றுபடவேண்டும் எனவும் சந்திரிகா அம்மையாரும் இணையவேண்டும் என்றும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'எனக்கு ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவு இல்லை. கட்சியை கட்டியெழுப்புவதே எனது நோக்கம். சுதந்திரக் கட்சி என்பது ராஜபக்ச குடும்பத்துக்கோ அல்லது பண்டாரநாயக்க குடும்பத்துக்கோ உரித்தானது அல்ல, அது மக்களின் கட்சி- என்றார். (ம)

# இரட்டைக் குடியுரிமை: விரைவில் புதிய திட்டம்

கொழும்பு, மே 6

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள், இலங்கையிலும் வசிக்கவும் தொழில் செய்யவும் புதுப்பிக்கத்தக்க நிரந்தர வதிவிட விசா பெற புதியதிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று குடிவரவு,குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ஸ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார். அந்தந்த நாடுகளில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் காரணமாக இரட்டைக் குடியுரிமையைப் பெற முடியாத வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பல முறையீடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# எதிரணியின் பக்கம் சென்றுள்ள எம்.பி.க்களுக்கு உயிர் ஆபத்து!

## சூடுபிடிக்கப்போகும் நாடாளுமன்ற அமர்வு

கொழும்பு, மே 6

அரசிலிருந்து விலகி, எதிரணிக்குச் சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுப்பதற்குத் தயாராகியுள்ளனர்.

தனக்கு உணவில் விஷம் கலந்துகொடுக்கப்பட்டுள்ளது எனவும் இதனால் பல நாள்கள் நோய் வாய்பட்டிருந்ததாகவும் முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க அண்மையில் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். ரொஷான் ரணசிங்கவின் இந்தக் குற்றச்சாட்டு பாரதூரமானது எனவும், இது தொடர்பில் அரசு முறையான விசாரணையை முன்னெடுக்கவேண்டும் என்றும் எதிரணி உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர். இதைத் தொடர்ந்தே தமது பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகளை அரசிலிருந்து விலகி, எதிரணியின் பக்கமாகச் சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்தினர். (ம-44)

# தினம் தெரியுமோ?

**கோ**மாதா எங்கள் குலமாதா என்டு பசுக்களை தெய்வமா கும்பிட்ட மண்ணில, கள்ள மாடு பிடிச்சு அதுகளை கும்பலா அடைச்சு வைச்சு, வெட்டி இறைச்சியாக்கின கொல்களம் ஒன்டு யாழ்ப்பாணம் ரவுனுக்குள்ள முந்தநாள் பிடிபட்டிருக்கு. இதைப்பற்றி செய்தியளிலையும் அறிஞ்சிருப்பியள். உந்தக் கொல்களத்துக்குப் பின்னால ஆமி இன்ரலிஜண்ட்காரர் இருக்கினமெண்டும் தகவல் வந்திருக்கும். அமாவாசைக்கும் அப்பக்கருக்கும் என்ன தொடர்பெண்டமாதிரி, மாட்டுக் கொல்களத்துக்கும் ஆமிக்காரருக்கும் என்ன தொடர்பிருக்கமுடியும்? என்டு கனக்க யோசிச்சிருப்பியள். அங்கதான் இருக்கு விளையாட்டு.

என்னதான் ஏமசாமத்தில போய்,றோட்டில நிக்கிற மாடுகளைக் களவாப் பிடிச்சு வாகனத்தில ஏத்தினாலும், அதுகளை உந்தக் கொல்களத்துக்கு கொண்டு வாறது பெரும்பாடு. றோட்டுவழிய நிக்கிற பொலிஸ்காரர் காணுவினம். சனங்கள் ஆரும் காணலாம். அதால ரூட் கிளியர் பண்ணிக் குடுக்கிற வேலையை ஆமிக்காரர் செய்திருக்கினம். ஒவ்வொரு நாளும் குறைஞ்சது நாலைஞ்சு மாடாவது உந்தக் கொல்களத்தில வெட்டுப்பட்டிருக்கு. அதில மூண்டுமாடு கொல்களக்காரருக்கு. ஒரு மாடு ஆமிக்காரருக்கு. சும்மா ரோந்து போறமாதிரி ரூட் கிளியர் பண்ணுறதுக்கு ஒவ்வொரு நாளும் ஒருமாட்டின்ர காசெண்டால் சும்மாவோ. அதால கொல்களக்காரரும் பயமில்லாமல் கனநாளா உதே இடத்திலவைச்சு, மாடுகளை வெட்டித்தள்ளியிருக்கினம். சாதாரண சாப்பாட்டுக் கடையளுக்குள்ள ஈ இருக்கோ? இலையான் இருக்கோ? என்டு பூதக்கண்ணாடி வைச்சு தேடுற சுகாதாரப்பிரிவுக்காரருக்கும் உந்த இடம் வருசக்கணக்கா கண்ணில தெரியாதது அதிசயம்தான்.

நல்லவேளையா, உங்க இப்பிடியொரு கொல்களம் இருக்கிறதை ஆரோ ஒரு புண்ணியவான் கண்டுபிடிச்சு, பொலிஸுக்குச் சொன்னதாலதான் மிச்சமாயிருந்த மாடுகளாவது தப்பியிருக்கு. பொலிஸ்காரர் அந்த இடத்தைச் சுத்திவளைக்கேக்க கொல்களத்துக்க இருந்த ஒராளைத்தான் பிடிச்சவை. அந்தாள் ஏதோ சம்பளத்துக்கு இறைச்சி பங்குபோட வந்த ஆளாம். வாலைப் பிடிச்சுக் கொண்டு மாட்டை விட்ட கதை மாதிரி, கூலிக்கு வேலை செய்ய வந்த ஆளைப் பிடிச்சுக்கொண்டு , அந்தக் கொல்களத்தை நடத்தின உண்மையான சூத்திரதாரியளை கோட்டை விட்டிட்டினம்.

அதைவிட இன்னொரு சம்பவமும் உதில நடந்தது. பொலிஸ்காரர் அந்த இடத்தை ரவுண்டப் பண்ணி, மாடுகளை ஏத்திக்கொண்டு போக வெளிக்கிடேக்க அவைக்கு ஒரு போன் வந்திருக்கு. 'எங்களுக்குத் தெரிஞ்சவர்தான் செய்தவர். காசு எவ்வளவும் தரலாம். உதுகளை விட்டிட்டுப் போங்கோ. மாடுகளை இடம் மாத்தின பிறகு இதைப் பிடிக்கிறமாதிரி வாங்கோ' என்டும் பொலிஸ்காரரோட போனில டீல் பேசுப்பட்டதாம். அப்பிடி டீல் பேசினதும் ஆமி இன்ரலிஜண்ட் தானாம். நல்லகாலம் அதுக்குப் பொலிஸ்காரர் ஓமெண்டேலை. முந்தி மனிசரை கடத்தி வெட்டிக் கொத்தினவை இப்ப ஆடு, மாடுகளைக் கடத்தி வெட்டிக் கொத்துகினம். வெட்டின கையும், கடத்தின காலும் சும்மா இருக்காது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுக்களை வதைப்பதை உடன் கட்டுப்படுத்துக

## சைவ மகாசபை கண்டனம்

யாழ்ப்பாணம், மே 6

**பசுக்கள் கடத்தப்பட்டு, கொடூரமாக அடைத்து வைக்கப்பட்டு மறைவிடங்களிலும் சட்டவிரோத கொல்களங்களிலும் இறைச்சியாக்கப்படுகின்றமைக்கு சைவ மகாசபை வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் சைவ மகாசபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

பசுக்களைத் தெய்வமாக வணங்கும் யாழ்ப்பாணத்தில், அவை மிகக் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டுசட்டவிரோதமான இடங்களில் இறைச்சிக்காககப்பட்டு விற்பனை செய்யப்படும் அவலம் மனதை வருத்துகின்றது. கடந்த சனிக்கிழமை மட்டும் யாழ். நகரில் 20 மேற்பட்ட பசுக்கள், காளைகள் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்து கடத்திவரப்பட்ட நிலையில் சட்டவிரோத கொல்களங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. வாயில்லா ஜீவன்கள் இரத்த வாடை சூழ்ந்த இடத்தில் பட்டினியோடு, தாகத்தோடு அடைத்துவைக்கப்பட்டிருந்தமையும், கொல்லப்பட்டமையும் மிகுந்த துயரத்தைத் தருகின்றது. ஜீவகாருண்ய நடைமுறைகளை கிஞ்சித்தும் கடைப்பிடிக்காமல் இந்த உயிர்களைத் தொடர்ச்சியாகத் துன்புறுத்தும் செயற்பாடு இம்மண்ணில் இருந்து ஒழிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-125)

## போதை வியாபாரம்; புதியவர்கள் ஈடுபாடு

### பொலிஸார் தகவல்

கொழும்பு,மே 6

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதற்காக புதிதாகப் பலர் இணைந்துள்ளனர் என்று பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால நடவடிக்கைகளில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதனையடுத்து புதிய கடத்தல்காரர்கள் இணைந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 6

புத்தூர் கிழக்கு- தல்லூடை அருள்மிகு கன்னியர் வைரவர் ஆலயத்தில், சித்திரைப் பரணி விழா எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, மாலை 7 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், இளஞ்சைவப்புலவர், பிரசங்க வாரிதி ச.நவநீதனின் 'சித்திரைப் பரணி மகிமை' என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ப)

## அடுத்தாண்டு புதிய வரிகள்

கொழும்பு,மே 6

வரிகளை வசூலிப்பதற்காக அடுத்த ஆண்டு சொத்து வரி, பரிசு மற்றும் பரம்பரை வரியை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார விளக்க அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2027 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 15 சதவீதத்தை கடந்து வருவாய் இலக்குகளை அடைவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது எனவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## பேராசிரியர் இராஜேஸ்வரன் நேற்றுமுன்தினம் மறைவு!



யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தலைவரும் பேராசிரியருமான எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலமானார்.

1977ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது புவியியல் சிறப்புக் கலைமாணி பட்டத்தைப் பெற்ற இவர், 1977 முதல் 1978 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியற்றுறை உதவி விரிவுரையாளராகத் தனது பணியை ஆரம்பித்து, பின்னர் 1979 இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார்.

அங்கு தனது முதுகலைமாணி, கலாநிதி பட்டங்களை நிறைவுசெய்து பேராசிரியராக உயர்வுபெற்றார். 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை புவியியல் துறையின் தலைவராகக் கடமையாற்றிய பேராசிரியர், சிரேஷ்ட மாணவ ஆலோசகராகவும் யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணைப்பாளராகவும் கடமைபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-555)

## நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 6

ஓய்வுநிலை நூலகர் கணேசஐயர் சௌந்தரராஜன் எழுதிய 'யாழ்ப்பாணத் தமிழியல் ஆய்வடங்கல்', மூத்த ஊடகவியலாளர் நவரத்தினம் பரமேஸ்வரன் எழுதிய 'யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாறு' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஆகியவற்றின் ஏற்பாட்டில், நல்லூரிலுள்ள வடமாகாணக் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வே.ஆயகுலன், யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் [illegible] தரம்பிள்ளை [illegible] (ப-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பணவரவு இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களுடன் அனுசரித்துச் செல்லவும். இடையூறுகள் நீங்கும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்யவேண்டிவரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வியாபாரம் வழக்கம் போல் நடைபெறும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படலாம். விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். தாயாரின் உடல ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லவும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. இடையூறுகள் விலகும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். அலைச்சல் உண்டாகும். சில சங்கடங்கள் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மே 6

உயிரிழை அமைப்பின் வருடாந்த பொதுக்குழு கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.வசந்தரூபன் நெறிப்படுத்தலில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக செ.ஆனந்தராசா, செயலாளராக பொ.சதீஸ்வரன், பொருளாளராக கவிதா, உபதலைவராக கு.பிரபாகரன், உபசெயலாளராக பி.பெனில்டஸ், பதில் தலைவராக யோ.புவிதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## பொதுவேட்பாளர் ஆதரவும் எதிர்ப்பும்

தமிழ் அரசியல் பரப்பில் இப்போது தமிழ்ப் பொது வேட்பாளர் விடயமே பிரதான பேசுபொருளாக மாறியிருக்கிறது. கடந்த சிலமாதங்களாக ஒருவித மந்த நிலைக்குச் சென்றிருந்த தமிழ் அரசியல்வாதிகள் இப்போது பொதுவேட்பாளர் விடயத்தை ஒட்டியும், வெட்டியும் களத்தில் கருத்துகளோடு இறங்கியிருக்கிறார்கள். இதுவரை காலமும் சிங்கள வேட்பாளர்களுக்கு முட்டுக் கொடுத்து, அவர்களை அரியணை ஏற்றியும் தமிழர் தரப்பு எவ்விதத் தீர்வையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. மாறாக யாரெல்லாம் தமிழர்களின் முதுகில் காலைவைத்து அரியணை ஏறினார்களோ, அவர்கள் தான் முன்னைய ஆட்சியாளர்களைவிடவும் அதிகமாக தமிழினத்தை எட்டி உதைத்தார்கள். இப்படியே முட்டுக்கொடுப்பதும், ஏமாற்றப்படுவதுமே தொடர் கதையாகிப்போன நிலையில்தான், ஒரு பரீட்சார்த்த முயற்சியாக தமிழ்த் தரப்பு பொதுவேட்பாளர் என்ற விடயத்தை இம்முறை கையில் எடுத்திருக்கிறது.

ஆனால், இந்தப் பொதுவேட்பாளர் என்ற விடயம், பல அரசியல்வாதிகளையும், அவர்களுக்கு முதுகு சொறிபவர்களையும் பதறவைத்திருக்கிறது. இறுதிப் போரை நடத்திய போர்க்குற்றவாளிகளில் முக்கியமானவரான சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை எடுத்தபோது, அதற்குக் காவடி எடுத்தவர்கள்கூட, இப்போது பொதுவேட்பாளர் என்ற விவகாரம்; தமிழர்களின் இருப்புக்கே உலை வைத்துவிடும் என்று மண்ணெண்ணெய்பட்ட பாம்புபோலபதறித்துடிக்கிறார்கள். இந்தப் பதறலுக்கும்,பொதுவேட்பாளர் விவகாரத்தைக் குழப்ப நினைப்பதற்கும் பின்னால் பல 'டீல்கள்' இருக்கவே செய்கின்றன. சிலவேளைகளில் இந்தப் பொதுவேட்பாளர் விடயம், அதனை ஒழுங்கமைப்பவர்களின் திட்டப்படி, தமிழர்களின் உரிமைக் குரலுக்கான வெற்றிகர அடையாளமாக மாறிவிட்டால், இதுநாள்வரை ஆளும் தரப்புக்கு எவ்வித நிபந்தனையுமில்லாமல் ஆதரவு கொடுத்த தங்களது அரசியல் வங்குரோத்துத்தனம் வெளிப்பட்டுவிடும் என்பது இந்தப் பதறல்களுக்கான காரணங்களில் முக்கியமானது. அவ்வாறு தங்களின் கையாலாகத்தனம் அம்பலமாகிவிட்டால் அவர்களால் அரசியல் செய்யமுடியாதே. அதைவிட இன்னொரு காரணமும் இருக்கின்றது. தமிழ்த் தரப்பை ஒரு சுயமுடிவை எடுக்கவிடாமல், எப்போதும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின்மீது தங்கியிருக்கும் நிலையை உண்டாக்கும் நிகழ்ச்சிநிரலை சில தமிழ் அரசியல்வாதிகளும், சில கருத்துருவாக்கிகள் என்று சொல்லப்படுவோரும் செவ்வனே செய்துவந்தார்கள். அதற்காக அவர்களுக்குப் பதவி, அதிகாரம், பணம் என்பன திரைமறைவில் தாராளமாக வழங்கப்பட்டன. இப்போது, வாக்குகளால் தோற்றாலும் இலட்சியத்தால் வெல்லும் உத்தியோடு களமிறக்கப்படும் பொதுவேட்பாளரால், இந்தச் சுகபோகங்கள் இல்லாமற்போய்விடும். அப்படியானால் அவர்களுக்கு பொதுவேட்பாளர் என்ற சொல்லைக் கேட்டவுடனேயே உதறல் எடுக்கத்தானே செய்யும்.

இந்தச்சமயத்தில்தான் தமிழ்த்தரப்பு ஒரு தெளிவான முடிவை எடுக்கவேண்டும். பொதுவேட்பாளர் என்ற விடயத்தை தனியே அரசியல் தரப்புகள், புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகள் என்ற வட்டத்துக்குள் மாத்திரம் வைத்திராமல், அதனை மக்கள் மயப்படுத்தப்பட்டதாக, பொதுவான கருத்து நிலையாக வளர்த்தெடுக்கவேண்டும். அப்போதுதான் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கரு பூரண வெற்றியைத் தருவதோடு, திட்டமிட்டபடி தமிழ் மக்களின் உரிமைக்குரலாகவும் எழுச்சிபெறும். கூடவே பொது வேட்பாளர் விடயத்தை எதிர்க்கும் 'டீல்'காரர்களை இனங்கண்டு, அவர்களை தமிழ் அரசியல் பரப்பில் இருந்து அகற்றி, நிரந்தரமாக அஞ்ஞாதவாசத்துக்குத் தள்ளவேண்டும். இல்லையேல்; கூடஇருந்தே பொது வேட்பாளர் விடயத்தைக் குழப்பி, நீர்த்துப்போகச் செய்துவிட்டு, தமிழ்த் தரப்பை தொடர்ந்தும் தென்னிலங்கையை நம்பியிருக்கும் அரசியல் வெறுமைக்குள் வீழ்த்திவிடுவார்கள். இது மிகக் கவனமாகவும் நிதானமாகவும் பயணிக்கவேண்டிய தருணம்...!






புலிகளுக்கு எதிரான போர் போன்று

## ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான போர் தொடருமாம்



கம்மன்பில தெரிவிப்பு

**கொழும்பு, மே 6**

**புலிகளுக்கு எதிரான போரை வெற்றிகரமாக முன்னெடுத்ததுபோல, ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து நாட்டை பாதுகாப்பதற்கான போராட்டமும் தொடரும் என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கம்மன்பில இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தேசப்பற்றுள்ள ஆட்சி கட்டியெழுப்பப்படும் என்ற உறுதிமொழியை 2019ஆம் ஆண்டில் வழங்கினோம். அந்த உறுதிமொழியை நாம் நிறைவேற்றினோம். நாம் ஆட்சியைப் பிடிக்கும்வேளை ஜனாதிபதியை அமெரிக்கா பிடித்துவிட்டது. எம்மால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி இரு அமெரிக்கர்களின் தேவைக்கேற்பவே ஆட்சி செய்தார். ஒருவர் அமெரிக்க தூதுவர், மற்றையவர் மெதமுலக அமெரிக்கரான பஸில் ராஜபக்ச.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இருந்த கோத்தாபய வேறு, தேர்தலுக்குப் பின்னர் உருவான கோத்தாபய வேறு. தேர்தலுக்கு முன்னர் கப்பீரமாக இருந்த கோத்தாபய அதன்பிறகு அமெரிக்கத் தூதுவர் முன்னிலையில் பூனைக்குட்டிபோல் அடங்கிப்போனார் – என்றார். (ம-44)

## சஜித் அணியில் சங்கமிப்பில்லை

கொழும்பு, மே 6

ஐக்கியமக்கள்சக்தியுடன் இணைந்து கொண்டதாக வந்த செய்திகளில் எந்தவித உண்மையுமில்லை என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ம-6)



## 2,771 பேர் இஸ்ரேலுக்கு

கொழும்பு, மே 6

இலங்கையில் இருந்து இந்த ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதிக்குள் 2 ஆயிரத்து 771 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக இஸ்ரேலுக்குச் சென்றுள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ம)

ஜனாதிபதித் தேர்தல்;

## பெரமுன நிலைப்பாடு மே மாதம் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பொதுஜன பெரமுனக் கட்சியின் நிலைப்பாடு எதிர்வரும் ஜூன் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பெரமுனவின் சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதா அல்லது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதா என்பது தொடர்பில் கட்சிக்குள் தற்போது ஆராயப்பட்டுவருகின்றது. இந்த நிலையிலேயே ஜூன் மாதமே பெரமுனவின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-44)

## பெரமுனவின் ஆதரவை கோரவில்லை ரணில்

கொழும்பு, மே 6

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குமாறு பொதுஜன பெரமுனக் கட்சியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுக்கவில்லை என்று அந்தக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ம-44)

**நாளை**

07.05.2024

**செவ்வாய்க்கிழமை**

**சித்திரை - 24**

அமாவாசை விரதம்

சுபநேரம் : 10.25 - 11.55

ராகுகாலம் : 02.55 - 04.25

**நாளொரு நல்வார்த்தை**

**தீய வழிமுறைகளின் மூலம் நீங்கள் நல்ல முடிவுகளை அடைய முடியாது, ஏனென்றால் வழிமுறை விதைகளைப் போன்றது, முடிவு மரத்தைப் போன்றது.**

**மார்டின் லூதர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியோரங்களில் குப்பை மக்கள் அசௌகரியம்

மன்னார், மே 6

மன்னார் மற்றும் தலைமன்னார் பிரதான வீதி ஓரங்களில் மருத்துவக் கழிவுகள் உட்பட பொலித்தீன் கழிவுகள் முறையற்றவிதமாகக் கொட்டப்பட்டுள்ளமை சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தியுள்ளதாகப் பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



எனவே அந்தப் பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உரிய விதத்தில் அகற்றுவதுடன், இத்தகைய சுகாதாரச் சீர்கேட்டில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(ம-213)


## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் முன்னைநாள் செயலாளரும் தற்போதய அங்கத்தவருமான

**வி. மாணிக்கம்** அவர்களின் துணைவியார்

**ஸ்ரீ ரஞ்சிதமலர்**

அவர்கள் 03.05.2024 அன்று இறைபதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபை

**வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில்.**

**(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்)**

## காணி வீடு விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, கிராமசபை ஒழுங்கையில் (கிராம சேவையாளர் பிரிவு J / 260)

நில.பர 3 குளி 8.50 அளவுள்ள காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

**077 967 2152, 077 902 4248**

(cs.419) (N-1)

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள / சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 13.06.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 14.06.2024 மற்றும் 15.06.2024


| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ் / ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ் /பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் / கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601

www.peoplesbank.lk
PEOPLE'S BANK
Pride of the Nation


## கண்ணீர் அஞ்சலி



### Dr.S.T.B.இராஜேஸ்வரன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் முன்னாள் துறைத்தலைவரும் (2011 - 2013), ஓய்வு பெற்ற புவியியல் பேராசிரியருமான கலாநிதி பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரன் அவர்கள் நேற்று முன்தினம் (04.05.2024) அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து மிகுந்த கவலையடைகின்றோம்.


அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு, யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறையினர் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புவியியற்றுறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(CS 54956) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 07 . 1950



மறைவு 04 . 05 . 2024

### செல்வநாயகம் கருணாமூர்த்தி

சங்கானை தேவாலய வீதியை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் கருணாமூர்த்தி நேற்று முன்தினம் (04.05.2024) சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம்-ரத்தினசிகாமணி தம்பதியரின் அன்பு மருமகனும் மங்கையகரசியின் அன்புக் கணவரும் கீதா (ஜேர்மனி), நிரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரன், கோமுகி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலக்ஷி, டினுஷா, சச்சின், ஆரோன், ஆரணியா ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வராணி (லண்டன்), குணரத்தினம், செல்வரத்தினம் (கனடா), செல்வரஞ்சிதம் (ஜேர்மனி), ஜெகநாதன் ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 07.05.2024 செவ்வவாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கராச்சி பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.


சண்டிலிப்பாய் மேற்கு

021 224 0264, 077 208 1162

(CS 54957) V-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 10 . 1943



மறைவு 18 . 04 . 2023

### அமரர் சின்னத்தம்பி இராமலிங்கம்

**திதி: சித்திரை மாத அமரபக்க சதுர்த்தசி**

**(06.05.2024)**

ஓராண்டு கடந்து சென்றதையே
நம்ப மறுக்கும் எம் மனம்
நீங்கள் எங்களை பிரிந்து சென்றதை
எங்ஙனம் ஏற்றுக்கொள்ளும்?
என்றும் மாறிடாத புன்சிரிப்பும்
யார் மனமும் நோக நடந்திடா பண்பும்
நேர்த்தியான தூய உடையழகும்
நெற்றியை விட்டகலா விபூதி குங்குமமும்
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
எம் விழிகளில் எப்போதும் நிறைந்திருக்கும்.....


புத்தூர் வீதி,
மீசாலை

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 12 . 1927



இறப்பு 04 . 05 . 2024

## கந்தையா ஐயாத்துரை

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் விடத்தற்பளை மற்றும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா ஐயாத்துரை நேற்றுமுன்தினம் (04.05.2024)சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை. வேலுப்பிள்ளை. செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும். டாக்டர். பூவதி (ஓய்வுபெற்ற பதிவு வைத்தியர்). பாலச்சந்திரன் (லண்டன்). மகேந்திரராஜா (ஓய்வுநிலை ஆசிரியர்). தெய்வேந்திரராஜா (ஓய்வுநிலை ஆசிரியர்). தேவராஜா (அதிபர்- யா / கச்சாய் மகாவித்தியாலயம்). தேவஈஸ்வரன் (கோட்டக்கல்வி அதிகாரி - சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும். சிவலோகநாதன் (ஓய்வுபெற்ற நிறைவேற்று பொறியியலாளர்). உதயமாலா (லண்டன்). சகுந்தலா (ஓய்வுபெற்ற பிரதி மாகாண பணிப்பாளர் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் வடக்கு மாகாணம்). தவமலர் (ஓய்வு நிலை ஆசிரியர்). வரதஜனனி (ஆசிரியர் - யா/ சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி). விஜயமாலா (ஆசிரியை - யா / கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். கிரிஷாந்தன் - கஜப்பிரியா. கீர்த்திகா - இரகுவரன். சுவஸ்திகா. பீரதீப். பிரகாஷ். மதுரன். மயூரிகா. கிரிசன். கீர்த்திகன். யதுர்சன். கோபிராம். சோபிதன். கவிலதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2024) திங்கட்கிழமை விடத்தற்பளையில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவல் சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
ஈசன் - 077 652 8673

(CS54910) N-1

# மரண அறிவித்தல்



## செல்லையா சிவபாதசுந்தரம்

தோற்றம் 23. 10. 1939 — மறைவு 04. 05. 2024

சரவணையைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணை பிரப்பங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவபாதசுந்தரம் நேற்று முன்தினம் (04.05.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்ணார்பண்ணை,
பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 932 1542
077 672 8093

(cs 54849 (N-1)

## கலைஞர்கள் பொதுக்கூட்டம்

வவுனியா பிரதேச செயலகத்துக்குட் பட்ட பிரதேசங்களில் புதிதாக கலைச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற கலைஞர்கள் அவை தொடர்பான விவரங்களை பிரதேச கலாசார உத்தியோகத்தர் அல்லது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் நாளைமறுதினம் 8ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் வழங்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது.


அத்துடன் வவுனியா பிரதேச கலாசார பேரவை மற்றும் அதிகாரசபையின் புதிய நிர்வாகத்தெரிவுகள் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக குணநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக செயலாளர் நா.கமலதாசன் அறிவித்துள்ளார்.

(ம-110)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1948



மறைவு . 02 . 05 . 2024

## சிவக்கொழுந்து லோகநாதன்

நீர்வேலி வடக்கு கேணியடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து லோகநாதன், (MSL Construction Proprietor) கடந்த 02.05.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சின்னப்பிள்ளை ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், கால்ஞ்சென்றவர்களான கனகரத்தினம் - கணேசம்மா ஆகியோரின் மருமகனும், மகேஸ்வரி, சுசிலா ஆகியோரின் பாசமிகு கணவரும், சுதர்ஜனன் (Swiss), Dr. சுதாஜனனி (Medical Officer-District Siddha Hospital-Jaffna), கிரிஜனன் (MSL Construction - Joint Partner), நிறோஜனன் (Technical Officer-Road Development Department- Point pedro), உஷாஜனனி (Officer S.L.T.B(NP) Kaarainagar) ஆகியோரின் அன்புத் தந்தையும், வர்ணகுலா (Swiss), விக்னராஜா (Lanka-Tiles-Store keeper) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆரபியின் (Swiss), அன்பு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதியம்மா, நடராஜா, இலட்சுமிப்பிள்ளை, தியாகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.1.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கேணியடி ஒழுங்கை,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தொடர்புகளுக்கு:
077 498 9794 (whatsapp)
004 179 198 5126 (WhatsApp)
077 470 9507, 076 415[illegible]

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் . 23 . 03 . 1942



மறைவு 03 . 05 . 2024

## விநாயகமூர்த்தி பராசக்தி

கொக்குவில் மேற்கு, சிவகுருலேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி பராசக்தி அவர்கள் கடந்த (03.05.2024) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா - மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், ஞானாம்பிகை, காலஞ்சென்ற கலைவாணி மற்றும் ஞானசூரியன் (லண்டன்), ஞானசம்பந்தன் (சுவிஸ்), ஞானசொரூபன், காலஞ்சென்ற ஞானேஸ்வரன் மற்றும் ஞானகுமார் (சுவிஸ்), ஞானேந்திரன் (உரிமையாளர், யாழ்ரன் மல்ரி சென்ரர்), ஞானகலை (கனடா), ஞானேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராஜா, விமலாதேவி, ருசானி, சிவரேகா, ஜெயறமணி, துரைசிங்கம், பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிசானி, சமந்தா, நிலானி, றக்ஷன், நிக்ஷன், மினோஜா, மகனிஹா, விதுஷன், லஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற S.R.அன்னலிங்கம் மற்றும் தவமணி காலஞ்சென்றவர்களான S.R.மகாலிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 00399) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாத்தாக அபகரிக்கப்படும் கட்டுக்கரைக்குள காணிகள்

## அதன் முகாமைத்துவக் குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 6

மன்னார் கட்டுக்கரை குளத்துக்கென ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு குளத்தின் படுக்கையிலுள்ள காடுகள் அழிக்கப்படுவதால் மாவட்டத்தின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று கட்டுக்கரை குளத்தின் திட்டமிடல் முகாமைத்துவக் குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.



இதுதொடர்பில் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார்கட்டுக்கரை குளத்தின்கீழ் தற்போது 31 ஆயிரத்து 400 ஏக்கர் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தக் குளத்தை விஸ்தரிப்பதற்கு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் குளத்தினருகே இருந்த 28 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெளியேற்றப்பட்டு 10 ஆயிரம் ஏக்கர் காணி பறவைகள் சரணாலயமாகவும் மிகுதிப் பகுதி குளத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட காணிகளில் சுமார் ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் அடாத்தாகப் பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் கட்டுக்கரை குளத்தின் நீர்ப்பாசன சேவைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

ஆகவே உரிய அதிகாரிகள் கட்டுக்கரை குளத்தில் பிடிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு சூழல் பாதிப்பைத் தடுக்கவேண்டும் - என்றனர்.

(ச-56-60)

## ஆற்றலாளர் விருதுக்கு இருவர்

2024ஆம் ஆண்டுக்கான இளைய தலைமுறை ஆற்றலாளர் விருதுக்கு இம்முறை இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ஞா.காந்திஜி, 13 வயதில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்டிய திருகோணமலை கோணேஸ்வரா கல்லூரி மாணவர் ஹரிகரன் தன்வந்த் ஆகியோரே இந்த விருதுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(ம-66)


## முதலாம் ஆண்டு நினைவு நாள்

கடந்த 18.04.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் சின்னத்தம்பி இராமலிங்கம்**



தோற்றம் 29.10.1933 — மறைவு 18.04.2023

ஆன்மீக நெறி நின்று அறப்பணியாற்றி
மாவடியாரின் பணிதனை மனதார நிறைவேற்றி
மண்ணுலக வாழ்விற்கு விடைகொடுத்து விண்ணுலகம் சென்று
ஆண்டொன்று கடந்த இந்நாளில்
தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
விநாயகரை துதித்து நிற்கிறோம்.

**திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய தர்மகத்தா சபையினர் வழிபடுவோர் திருபணிச்சபையினர் மீசாலை**

## மரண அறிவித்தல்



தோற்றம் 29.01.1951 — மறைவு 05.05.2024

**சிவசம்பு வைகுந்தவாசன் (சிறீ)**

(வே.கந்தையாப்பிள்ளை அன் சன்ஸ், மருந்துக்கடை உரிமையாளர்)

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும், கைலாசப்பிள்ளையார் கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு வைகுந்தவாசன் அவர்கள் நேற்று (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்வமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், கிருபாலினி (Pharmacist - UK), கிருசாந்தன் (Civil Engineer), லலிதாம்பிகா (Doctor, யாழ்.போதனா வைத்தியசாலை), கிருசாந்தி (Civil Engineer) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜதீபன் (Civil Engineer - UK), சிவறதனி (PHLT, யாழ்.போதனா வைத்தியசாலை), பிரதீசன் (Civil Engineer) ஆகியோரின் பாசமிகு மாமாவும், தனுகா, ரித்விகா, விதுசா, தபஸ்விதன், வருனேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கங்காதேவி, திருஞானசம்பந்தர் மற்றும் ஞானதேவி, ராசகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் நல்லம்மா, சபாநாயகம், சோதிநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2024) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.09, கைலாசப்பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 490 9723 (மகன்)**

(CS 04958) S-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 20.06.1950 — மறைவு 03.05.2024

**கனகலிங்கம் தவமணி**

இணுவில் கிழக்கு, அங்களப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் தவமணி அவர்கள் கடந்த 03.05.2024 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் த்கனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**பிள்ளைகள் - சுரேஸ்கரன், நிஷாகரன், ஜனனி, ஆர்த்தி, ஜனகன்**

**இணுவில் கிழக்கு, அங்களப்பாய்.**

(CS 00425) S-1

**பேரப்பிள்ளைகள் 077 027 7916**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தேவராசா சுதந்திரதேவி

ஊர்காவற்துறை கரம்பனை பிறப்பிடமாகவும், முதலியார் கோவிலடி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா சுதந்திரதேவி நேற்று (05.05.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேசிங்கம் - அன்னக்கிளி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற அருணாச்சலம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், தேவராசாவின் அன்பு மனைவியும், கஜனின் (U.K - முன்னாள் உதயன் பணிமனை உத்தியோகத்தர்) அன்புத் தாயாரும், அர்ச்சானவின் அன்பு மாமியாரும், ஹரினியின் பாசமிகு பேர்த்தியும், ஜெயமணி மற்றும் காலஞ்சென்றவர்களான குருநாதன், தங்கலிங்கம், குணசிங்கம், நடராஜா மணி, தங்கமணி, ராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருணகிரி, தேவராணி மற்றும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தம்பித்துரை, செல்வராணி, இந்திராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முதலியார் கோவில் வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 604 2149**
**+44 740 591 2277**

(cs.54954)



தோற்றம் 07.01.1948 — மறைவு 05.05.2024

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 04 . 1944 — மறைவு 01 . 05 . 2024

## செல்வி.மனுவேற்பிள்ளை மனோன்மணி (சின்னமணி)

ஒட்டகப்புலம், வசாவிளான் கிழக்கைப் பிறப்பிடமாகவும், 6/1, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மனுவேற்பிள்ளை மனோன்மணி அவர்கள் கடந்த 01.05.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - வெரோணிக்கம் தம்பதியரின் அன்புப் புத்திரியும், காலஞ்சென்றவர்களான றோசம்மா, அந்தோனிப்பிள்ளை, மரியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்னரத்தினம், பிலோமினா, இராஜசேகரம், சுனிதா, நிக்சன், விஜி ஆகியோரின் சிறிய தாயாரும், மல்லிகா, சாந்திகா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடலானது நாளை (07.05.2024) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் இல.6/1, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பாமா தனபாலசிங்கம் என்பவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, முற்பகல் 09.00 மணியளவில் ஒட்டகப்புலம் அமல உற்பவ ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, ஒட்டகப்புலம் அமல உற்பவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6/1 மாட்டீன் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்: [illegible]
021 222 5500

(CS 00423) S-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 02 . 1935 — மறைவு 02 . 05 . 2024

## வீரபாகு இலட்சுமி

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற க. வீரபாகு (அம்பாள் பொடி பில்டர்ஸ்) அவர்களின் பாசமிகு மனைவி, வீரபாகு இலட்சுமி கடந்த 02.05.2024 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2024) திங்கட்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் சண்முகம் வீதி, சங்கத்தானையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
சஜிஸ் - 077 077 7701
[illegible] - 076 107 9762
[illegible] - 076 754 1964

(CS42367) N-1

தகவல்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஸாவில் போர் நிறுத்தம்; இறுதிப் பேச்சு முன்னெடுப்பு

காஸா, மே 6

காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கான இறுதிக்கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

காஸாவில் சுமார் 15 இலட்சம் மக்கள் தஞ்சமடைந்துள்ள ராபாவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது மிகப்பெரும் மனிதப் படுகொலைகள் இடம்பெறுவதற்குக் காரணமாக அமையும் என்பதால் எகிப்து மற்றும் அமெரிக்காவின் இணைத் தலைமையில் அமைதிப் பேச்சுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இஸ்ரேலின் நிபந்தனைகளை பரிசீலிப்பதற்காக ஹமாஸ் அமைப்பு சிறப்புக் குழுவொன்றை அமைத்துள்ள பின்னணியில், காஸாவில் அமைதி திரும்புவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் அதற்கான அத்தனை முயற்சிகளும் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் எகிப்தின் தூதுக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

முன்னதாக, அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டு, காஸாவில் அமைதி ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், ராபாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் எந்தவொரு இராணுவ நடவடிக்கைக்கும் அமெரிக்கா ஆதரவு வழங்காது எனவும் திட்டவட்டமா கத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 08.04.2024 திங்கட்கிழமை அன்று
சிவபதப்பேறடைந்த எமது குடும்பத் தலைவி

### பவானி விஸ்வலிங்கம்


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 06.05.2024 திங்கட்கிழமை காலை 5 மணியளவில் காரைநகர் ஆலங்கன்று அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 08.05.2024 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

72/9, பனிக்கர் லேன்,
பலாலி வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
077 824 9234

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 04 . 1932



மறைவு
03 . 05 . 2024

### வேலுப்பிள்ளை இளையதம்பி

அளவெட்டி பெரிய கிணற்றடி கணேஸ்வரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இளையதம்பி அவர்கள் கடந்த (03.05.2024) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-கைலாயம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு-ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், சுகுணா, கருணா (Germany), சோதிபாலன் (Germany), சோதீஸ்வரி (கருணா-Germany) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோடீஸ்வரன், செல்வமாலினி, திருமாறன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரவிந், பிரவீனா, பிரார்த்தனா, திவ்யா, செல்வியா, அனிருத், அதீதனா ஆகியோரின் பேரனும் ரிஷானி, விகஷ்னி ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பெரிய கிணற்றடி கணேஸ்வரம்
அளவெட்டி.


தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் வருட நினைவஞ்சலி

(06.05.2024)

### சரவணமுத்து மகேந்திரன்

(ஓய்வுபெற்ற அதிபர்)



கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு என்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!


கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cr.42366) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
18 . 08 . 1951



இறைவன் அடியில்
06 . 05 . 2023

### அமரர் நல்லதம்பி செல்வராசா

திதி: சித்திரை மாத அபரபக்க பிரதமை
(24.04.2024)

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
நீங்கள் எங்களை பிரிந்து சென்றதை
எங்ஙனம் எம்மனம் ஏற்றுக் கொள்ளும்?
என்றும் மாறிடாத விடா முயற்சியும்
குடும்பத்தில் நீர் கொண்ட அக்கறையும்
யார் மனமும் நோக நடந்திடாத நற்குணமும்
நேர்கொண்ட நிமிர்ந்த பார்வையும்
எம் மனதில் இன்றும் விம்பமாய் தெரிகிறது அப்பா
இறைவன் வரம் ஒன்று கொடுத்தால்
கணப்பொழுதேனும் உங்களை காண கேட்போம்
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களில்
எப்போதும் நிலைத்திருக்கும்.

கலாவோடை
காரைநகர்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரகசியமாகக்...

இதேவேளை - இந்தக் கருத்துக்கணிப்பின் தரவுகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வுடனான விசேட சந்திப்பின்போது சீனத் துணை அமைச்சர் சன் ஹையன் தெரியப்படுத்தியுள்ளார். இலங்கையின் அரசியல் நிலைவரங்கள் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்புகள் அதிகம் என்பன தொடர்பில் கொழும்பில் அமைந்துள்ள சீன இராஜதந்திர மையம் ஆய்வு அறிக்கைகளை ஏற்கனவே பெய்ஜிங்குக்கு அனுப்பியிருந்தது.
இவற்றை முழுமையாக அவதானத்துக்கு எடுத்துக்கொண்ட பின்னரே சீனத் துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழுவினர் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். ஆனால், ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்த தகவல்களை நேரடியாக உறுதிப்படுத்திக்கொள்ள தீர்மானித்திருந்தனர்.
ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என்பதனைக் கண்டறிய, மக்களை நேரடியாகச் சந்தித்து கருத்துக்கணிப்பொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்தனர். இத்தகைய நடவடிக்கைகள் பொதுவாக இராஜதந்திர அணுகுமுறைகளுக்கு உட்பட்டதல்ல. ஆனாலும் அவ்வாறானதொரு கருத்துக்கணிப்பை மிகவும் இரகசியமாக முன்னெடுக்கத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.
இதன் பிரகாரம் கம்பஹா மாவட்டத்தின் பியகம தேர்தல் தொகுதியை கொழும்பில் உள்ள சீன இராஜதந்திரிகள் மிகவும் இரகசியமாகத் தெரிவு செய்திருந்தனர். சீனத் துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழுவினர் இலங்கைப் பயணத்தின்போது முதலாவதாக பியகம தேர்தல் தொகுதியில் வாக்காளர்களை சந்தித்துக் கருத்துக்கணிப்பைச் செய்துள்ளனர்.
இதன் பின்னரே நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இருதரப்பு சந்திப்புகளில் பங்கேற்றுள்ளனர். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியுடனான இருதரப்பு சந்திப்புக்கு அப்பால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் சீனத் துணை அமைச்சர் சன் ஹையனுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## ஒரு வருடச்...

- என்றுள்ளது. அதேவேளை, இலங்கையிலிருந்து கப்பல் மூலம் புறப்படும் பயணிகளிடமிருந்து தற்போது அறவிடப்படும் விலகல் வரியை இலங்கை அரசாங்கம் குறைத்துள்ளது.

(அ-ச-இ)

## கிணற்றில்...

சேர்ந்த முருகப்பிள்ளை மயில்வாகனம் (வயது-74) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ஆலயங்களில் புராணிகராக தேவபராயணம் ஓதிவரும் அவரைக் காணவில்லை என நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை முதல் உறவினர்களால் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் அவர் அப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் விழுந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இதையடுத்து அவரை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
உயிரிழப்புத் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ-ஒ-100)

## ஒய்வுபெற்ற...

அனுப்பப்பட்டவர்களும் இந்த வாகன அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்கமுடியும்.
மார்ச் 11 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாக பொதுநிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை யில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முதலாம் வகுப்பு இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், விசேட தர அதிகாரிகள், பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள், முதலாம் வகுப்பு பல் மருத்துவ நிபுணர்கள், இளநிலை மற்றும் மூத்தநிலை நீதித்துறை அதிகாரிகள் போன்றோர் இந்தத் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கமுடியும். (அ-ஒ-6)

## கூலிப்படையின்...

குடும்பத்தவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.
இலங்கை இராணுவத்திலிருந்து விலகியோரை ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு கூலிப்படையாக அனுப்புவது தொடர்பான விவகாரத்தில் இராணுவ மேஜர் ஒருவரும், வேலைவாய்ப்பு முகவரும் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-ஒ-6)

## பேச்சை...

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் போதைப் பொருளானது குடும்பங்களின் அடிப்படையை சிதைத்துக் கொண்டிருக்கும் நிலையில், அதற்கு எதிராக செயற்பட அனைவரும் ஒன்றிணையவேண்டும் - என்றார். (அ-ஒ-5)


## வேலையாட்கள் தேவை

யாழ்.பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கி இருந்து வீட்டு வேலை செய்வதற்கு ஆண்/பெண் பையன் ஒருவரும், ஒருவரும் தேவை.
சம்பளம் 50.000/. உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 711 1999

# காணவில்லை


| | |
|---|---|
| நாயின் இனம் | : Pug Dog (பெண்) |
| வயது | : 11/2 |
| கலர் | : வெள்ளை |
| தொலைந்த இடம் | : மானிப்பாய் ஓட்டுமடம் சந்தி அருகாமையில் |



தகுந்த சன்மானம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு:
077 777 8662
077 678 8243
077 684 5799
(CS 429) V-1


## மரண அறிவித்தல்

மலர்வு 19 - 15 - 1952



உதிர்வு 05 - 05 - 2024

### பரமசிவம் சிவபாலன்

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிவம் சிவபாலன் அவர்கள் நேற்று (05.05.2024) இறை நிலையுடன் சங்கமம் ஆகியுள்ளார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசிவம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், ஆறுமுகம் - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (ரதி) அன்புக் கணவரும், உலகேஸ்வரி (லண்டன்), சிவக்குமார் (லண்டன்), சிவசக்தி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தியாகராஜா, யோகராஜா, காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா மற்றும் தங்கராஜா, காலஞ்சென்றவர்களான விஜயராஜா, விஜயா மற்றும் மோகனராஜா ஆகியோரின் மைத்துனரும், சந்திரமலர், நாகம்மா, அன்னம்மா, சுகுதா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், கணக்காளர் சிவகுமார், சிவதர்சினி (லண்டன்), கணக்காளர் சுதர்ஷன் (அவுஸ்திரேலியா), மருத்துவர் திவாகர் (லண்டன்) எந்திரி கிஷாந்தன் (கனடா), கணக்காளரும், இலங்கையின் முன்னணி டெனிஸ் வீரருமான டினேஸ்காந்தன், ஹரிராம் (மாணவன், சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2024) செவ்வாய்க்கிழமை இல.160 (184), நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.தங்கராஜா - மைத்துனர்
(CS 54959) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 06 - 1945



மறைவு 03 - 05 - 2024

### இராஜேஸ்வரன் செல்வரட்ணம்

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இராஜேஸ்வரன் செல்வரட்ணம் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னையா-பொற்கொடியின் அன்பு மகளும் காலம் சென்ற ஐயாத்துரை-நாகம்மாவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராஜேஸ்வரனின் (ஜப்பான்), அன்பு மனைவியும் பசீதரன் (கொலன்ட்), சுதாகரன் (ஜேர்மனி), ஜெயகௌரி, அனுசா (கொவன்ட்), சிறீதரன், பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிரேகா, வனிதா, ஜெயந்தன், லிங்கேஸ்வரன், சஞ்சிலா, அனுசியா ஆகியோரின் அன்பு மாமியாரும் ரக்சா அனிஸ், அபர்ணா, அபிலாஸ், லக்ஸ்சனா, கோமதன், பிரியதர்சன், வர்மிகா, பிரதி, நிதுலன், கானுயன், கம்சியன், திபியன், அபிசயம், சியானுயன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் அமரர் மாணிக்கவாசகர், அமரர் நல்லம்மா அமரர் திருநாவுக்கரசு, சிவபாக்கியம் அமரர் சுந்தரமூர்த்தி, பரமேஸ்வரி, ஞானசம்மந்தன், விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 06.05.2024 அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(CS 428) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில்**
**31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை **15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம்** வரை
- தரகர் தேவையில்லை.

(CS/375) J-1

தொடர்பு :- **077 886 2927**

## பணிப்பெண் தேவை

சங்கானையில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்தோ அல்லது காலை முதல் மாலை வரை வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.

**(சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்)**

தொடர்பு: **077 604 1412**

## வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை "ஸ்கந்தா" பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(CS 54908) S-1

**077 391 3859,077 729 9212**


# மரண அறிவித்தல்



## புனிதவதி வேலாயுதம்

**தோற்றம்** 13.09.1940 — **மறைவு** 03.05.2024

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட புனிதவதி வேலாயுதம் கடந்த 03.05.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் மருமகளும், வைத்திலிங்கம் வேலாயும் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினமலர், பரிபூரணம், தனலட்சுமி, அருந்ததி, சந்திரசேகரம் (லண்டன்) காலஞ்சென்றவர்களான தர்மராஜா, இராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவசீலன் (சிவா - கனடா), சிவமணி (சிவானி - ஆசிரியை - கோப்பாய் நாவலர் த.வி), காலஞ்சென்ற சிவபாலன் (பாலா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானதீபன் (உதவி முகாமையாளர் - பொறி - இ. போ.ச. கோண்டாவில்), காயத்திரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சேரலாதன் (தரம் 11 யாழ்/ இந்துக்கல்லூரி 2023), ருக்ஷனன் (யாழ்/ இந்துக்கல்லூரி தரம் 10), சாய்ருத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

தொடர்பு:
**077 883 7150**
**077 968 8261**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் ஸ்ரீரஞ்சிதமலர் (பவா)

(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பழைய மாணவி,
ஓய்வுநிலை பிரதேச சபைச் செயலாளர் வலி. வடக்கு மல்லாகம், ஓய்வுநிலை நிர்வாக அதிகாரி வலிகாமக் கல்வி வலயம்)



**தோற்றம்** 09.02.1950 — **மறைவு** 03.05.2024

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் ஸ்ரீரஞ்சிதமலர் கடந்த (03.05.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற கந்தமுத்து - நல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற விநாயகன் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், லயன் விநாயகன் மாணிக்கம் (ஓய்வுநிலை அதிபர் யாழ். கனகரெத்தினம் ம.ம.வித்தியாலயம், ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் சுகன்யா (உஷா - கனடா - முன்னாள் முகாமையாளர் மக்கள் வங்கி - இணுவில்), சகிலேந்திரா (கண்ணா - லண்டன் - மென்பொருள் பொறியியலாளர்), காலஞ்சென்ற லாவண்யா (யாசோ) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜ்பவன் (சுரேன் - கனடா- Canada Post), பிருந்தா (லண்டன்- Quantity Surveyor) ஆகியோரின் மாமியாரும், ரக்ஷன்யா, அகன்யா, தீக்ஷிதன், நிகித்ரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் ஸ்ரீரஞ்சினி, சறோஜினி, ஸ்ரீபத்மினி, ஸ்ரீவையந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புளோரா, அமரர்களான விநாயமூர்த்தி, முருகையா, குணரெத்தினம் மற்றும் துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 614/3, K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் இன்று (06.05.2024) திங்கட்கிழமை நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

614/3, K.K.S. வீதி,
**யாழ்ப்பாணம்**

(cs.54950) N-1

தகவல்:
**லயன் வி. மாணிக்கம்**
**T.P: 077 6057 490**
**மகன் - 078 763 5436**
**மகள் - 078 763 8443**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org